1994 நவம்பர் 4]

இன்றைக்கு இருக்கிற ஒரு புதிய பரிணாம வளர்ச்சியில் புதிதாக வேலைவாய்ப்புகள் அல்லது நேரடி நியமனம் குறித்து இதில் அரசு ஒரு கருத்துரு கொண்டிருக்கிறது. அதனுடைய அடிப்படையில் இன்றைக்குத் தேர்வாணைக் குழுவினுடைய பரிசீலனையிலே அது இருக்கிறது. அது முடிவுறுமேயானால் மீண்டும் இந்த அரசு வனச் சரகர்களுக்கு நேரடியாக பயிற்சி அளிக்க வேண்டுமென்று கருதுமேயானால் அந்தக் கல்லூரியைத் தொடர்ந்து நடத்தும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

15—

மழைநீர் சேமிக்கும் திட்டத்தின் பயனை செய்திப்படம் மூலம் ஒளிபரப்புதல்

***24940–திரு. சி. இராமசுவாமி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மழைநீர் சேமிக்கும் திட்டத்தின் பயனை செய்திப் படமாக தயாரித்து தமிழகம் முழுவதும் ஒளிபரப்பிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் மழை நீரைச் சேமித்து வைத்தால் கோடைக் காலங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்போது, அது மிகவும் பயனுடையதாக இருக்கும். எனவே அரசு மறுபரிசீலனை செய்து, மழைக்காலங்களில் மழை நீரைச் சேமிக்கும் அந்தத் திட்டத்தின் பயனைச் செய்திப்படமாகத் தயாரித்து, தமிழகம் முழுவதும் ஒளிபரப்பிட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மழை நீரைச் சேமிக்கும் திட்டத்தின் பயனைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் சென்னைக் குடிநீர் வாரியம் ஒலி மற்றும் ஒளிப்பதிவின் மூலம் நாடாக்களைத் தயாரித்து சென்னைத் தொலைக்காட்சி நிலையம் மூலம் பொதுமக்களுக்கு திரையிட்டு வருகிறது. இதுவரை இதனைச் செயதிப்படமாகத் தயாரித்து, திரையரங்குகள் மூலம் வெளியிடவில்லை. மேலும், 'மழை நீரை எப்படிச் சேமிப்பது' என்பதை விளக்குகின்ற வகையிலே 'படங்களும் செய்முறைகளும்' என்கிற தலைப்பிலே விளக்கக் குறிப்புகள் கொண்ட கையேடுகள், சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் தயாரித்து வழங்கப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் உள்ள மக்கள் எவ்வாறு மழைத் தண்ணீரைச் சேமிப்பது என்ற கருத்தை தெரிந்து கொள்ள செய்திப்படமாக இந்த ஆண்டு தயாரிக்காவிட்டாலும் அடுத்த ஆண்டாவது தயாரித்துத் திரையிட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீரைச் சேமிப்பது எப்படி என்பதைப் பற்றித் தெரிவிக்கின்ற வகையிலே படம் எடுக்கப்படவேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறை நிதி ஒதுக்கீடு செய்யுமேயானால், செய்தித் துறையின் திரைப்படப் பிரிவின் மூலம் அந்தப் படத்தை எடுத்து வெளியிடுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, திருமதி இலதா பிரியகுமார், இருக்கையில் இல்லை.

வினா எண் 17, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு கல்வியமைச்சர்.

17—

உத்திரமேரூர் மற்றும் வாலாஜாபாத் பகுதிகளில் கலலூரிகள் அமைத்தல்.

35946—**திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :**